## IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

### O.S.NO. 46/2015

| | |
|---|---|
| Deposition of Witness | : PW–1 |
| Name | : ஜெகஜோதி |
| Father's Name /W/o | : க/பெ. நாகப்பன் |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : ஆட்டுப்பாக்கம் கிராமம், அரக்கோணம் வட்டம் |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 31.10.2023.

குறுக்கு விசாரணை: (முதல் பிரதிவாதி தரப்பில்)

1. 02.10.1981 ல் முனியம்மாளுக்கும் நாகப்பனுக்கும் விவாகரத்து ஆகிவிட்டதா என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் நாகப்பனின் மனைவி என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் திருமணத்திற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வா.சா.ஆ. 1 தான் அந்த திருமண ஆதார ஆவணமா என்றால் ஆம். வா.சா.ஆ.1 எங்கு யார் தயார் செய்தது என்றால் யார் தயார் செய்தது தெரியாது. திருமணம் ஏகம்பரநாதர் கோவிலில் நடந்தது. கோவிலில் திருமணத்திற்கு கொடுக்கப்படும் ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் பெரியவர்கள் வாங்கினார்களா தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை முறையாக பதிவு செய்துள்ளனா என்றால் தெரியவில்லை. எனக்கு ஏகம்பரநாதர் கோவிலில் திருமணம் நடைக்கவில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் அதற்கு ரசீது கொடுத்திருப்பார்கள் என்றாலும் வா.சா.ஆ.1 கோவிலில் வைத்து எழுதப்பட்டிருந்தால் அதை முறையாக பதிவு செய்திருப்பேன் என்றாலும் வா.சா.ஆ.1 போலியான ஆவணம் என்றால் இல்லை.

2. நாகப்பனின் முதல் மனைவி முனியம்மாளுக்கு அம்மு என்ற ஒரு மகள்

உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. நாகப்பனுக்கும் அவர் முதல் மனைவி முனியம்மாளுக்கு அம்மு என்ற ஒரு மகள் உள்ளார் என்றாலும் நான் பொய்யாக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அம்மு என்ற மகள் இருக்கும்போதே நான் அவரை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் மகள் உள்ளது தெரியாது. நாகப்பன் உயிருடன் இருக்கும்போதே அவர் மகளுக்கு எந்த வாழ்வாதாரமும் செய்யவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் என் கணவர் நாகப்பன் என்னுடன் வசித்து வந்ததாக சொல்லியுள்ளது சரியா என்றால் சரிதான். நாகப்பன் ரயில்வேயில் எந்த வருடம் சேர்ந்தார் என்றால் முதலில் கூலி வேலை செய்தார். ரயில்வேயில் எப்போது சேர்ந்தார் என்று தெரியாது. நாகப்பனின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர். (சாட்சி மீண்டும் மாற்றி தன் கணவருடன் சேர்ந்து 2 ஆண் 3 பெண் என்று கூறுகிறார்).

3. என் பிரமாணவாக்குமூலத்தில் நானும் என் கணவர் நாகப்பனும் உறவினர் திருமணத்திற்கு செல்வது முதல் மனைவிக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நானும் என் கணவர் நாகப்பனும் உறவினர் திருமணத்திற்கு செல்லும்போது முதல் மனைவிக்கு தெரியாமல் செல்வோமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.11 ல் குடும்ப அட்டை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதற்கு முன்பு வழங்கப்பட்ட குடும்ப அட்டையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.13 ல் அசல் வழக்கு எண் 120/2005 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என் பிரமாணவாக்குமூலத்தில் அந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆம். அசல் வழக்கு எண் 120/2005 வழக்கில் இதே நீதிமன்றம் முதல் மனைவி முனியம்மாள் தான் வாரிசு என்று தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் எனக்கு தெரியல்லை. எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றாலும் நான் வேண்டும்மென்றே தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. 2014 ல் சென்னை மத்திய தீர்ப்பாயத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். பென்சன் வரவில்லை என்பதால் நான் போட்டேன். அந்த வழக்கில்

எதிர்வாதியாக ரயில்வே அதிகாரி ஆஜராகி முனியம்மாள் தான் முதல் மனைவி என்று தீர்ப்பாயத்தில் அசல் வழக்கு எண் 120/2005 வழக்கின் தீர்ப்பை தாக்கல் செய்தார்கள் என்றால் நான் தான் முதல் மனைவி. தீர்ப்பாயம் முனியம்மாள் தான் முதல் மனைவி என்று தீர்ப்பு வழங்கிய பிறகு 2015 ல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் ஆம். என் பிரமாணவாக்குமூலத்தில் இறந்த நாகப்பனின் இறுதி சடங்கில் முதல் மனைவி முனியம்மாள் கலந்துக்கொளள்வில்லை என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதாரம் இல்லை. அவர் கலந்துக்கொளள்வில்லை. நான் தான் நாகப்பனுக்கு இறுதி சடங்கு செய்தேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இறப்பு சான்றிதழ் தான் உள்ளது. நாகப்பன் இறந்த பிறகு முதல் மனைவியை பஞ்சாயத்துக்காரங்கள் அழைத்து அவர் தான் இறுதி சடங்குகள் செய்தார் என்றால் இல்லை அவர் வரவில்லை. இறந்தப்போன நாகப்பனின் பென்சினை தற்போது முதல் மனைவி முனியம்மாள் தான் பெற்று வருகிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

5. என் பிரமாணவாக்குமூலத்தில் நாகப்பன் இறந்த பிறகு இறுதி சடங்கிற்காக ரயில்வேயில் இருந்து ரூபாய் 10 ஆயிரம் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் அது ரொக்கமாக கொடுத்தார்களா அல்லது காசோலையாக கொடுத்தார்களா என்றால் அவர் ஓய்வு பெற்ற பிறகு இறந்ததால் அவர் அலுவகத்தில் இருந்து யாரும் வரவில்லை. ஒரு ரூபாய் பணமும் கொடுக்கப்படவில்லை. முதல் மனைவி முனியம்மாளிடம் தான் ரூபாய் 10 ஆயிரம் கொடுத்தார்கள் என்றால் இல்லை. ஓய்வு பெற்ற பிறகு இறந்தால் அலுவகத்தில் இருந்து யாரும் வரமாட்டார்கள். வா.சா.ஆ.12 ல் இறந்த நாகப்பன் இறப்பு சான்றிதழ் முதலில் முதல் மனைவிக்கு தான் கொடுப்பார்கள் என்றால் எனக்கு மட்டும் தான் இறப்பு சான்றிதழ் கொடுத்தார்கள். என் பிரமாணவாக்குமூலத்தில் முதல் மனைவிக்கு பென்சனும் செட்டில்மென்ட்யும் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. முதல் மனைவி என்பதால் அவருக்குதான் பணபலன்கள் கொடுத்தார்கள் என்றால் இல்லை. நாகப்பன் வேலையில் இருக்கும்போதே அவர் சம்பளத்தை பெறுவதற்கும் அவர் இறந்த பிறகு அவர் பணபலன்களை ரயில்வே நிர்வாகத்தை ஏமாற்றி பெருவதறக்காக பொய்யான

வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் நாகப்பனுக்கும் திருமணம் நடைக்கவில்லை என்றாலும் முனியம்மாள் தான் அவருக்கு முதல் மனைவி என்றால் என்னை திருமணம் செய்து வந்தார்கள். அப்போது அவருக்கு திருமணம் ஆகியுள்ளதா என்று எனக்கு தெரியாது. முதல் மனைவிக்கு ஜீவனாம்சம் வழங்கவேண்டும் என்று முனியம்மாள் எம்.சி. 1/1993 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் முனியம்மாளுக்கு ரூபாய் 300 ம் அவர் மகள் அம்முவிற்கு ரூபாய் 200ம் ஜீவனாம்சமாக உத்தரவிடப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

6. அந்த தீர்ப்பை எதிர்த்து நாகப்பன் மேல்முறையீடு செய்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு விவரங்கள் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நாகப்பன் அந்த தீர்ப்பை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இறந்த நாகப்பனிடம் இருந்தும் அவர் பணத்தை பெறுவதற்காகவும் அவர் சொத்தை அபகரிப்பதற்காகவும் மனைவி என்று பொயய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கதக்கதுஅல்ல என்றால் சரியல்ல. வாதிகளுக்கு நாகப்பன் உடன் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.